**நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்துார், வேலூர் மாவட்டம்.**

**சி.சி. 24/2017**

2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 2 வது நபாின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுந்தரம் | வயது | 63 |
| த.பெ.(அ)க.பெ. | கரியகவுண்டர் | தொழில் | கூலி |
| ஊர்/பணிபுரியுமிடம் | தாதகுள்ளனூர் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்துார் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்துார் | | |

முதல் விசாரணை :

நான் தாதகுள்ளனூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். சேகரை தெரியும். அவரும் நானும் 8 வருடங்களாக ஒன்றாக ஆடு மேய்த்துக்கொண்டிருந்தோம். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் சேகர் மீது எதிரிகள் கேஸ் கொடுத்து விட்டதாகவும், அவரை போலீஸார் பிடித்து சென்றுவிட்டதாகவும், அவருடைய அப்பா வேடி கவுண்டர் என்னிடத்தில் கூறி மேற்படி சேகர் வைத்திருந்த 14 பெரிய ஆடுகளையும் 21 சிறிய ஆடுகளையும் என்னை மேய்க்கும்படி சொன்னார். அவருடைய ஆட்டுப்பட்டி ஆறுமுக நகரில் இருந்தது. மேற்படி வேடி கவுண்டர் என்னை கேட்டுக்கொண்டதாலும் நான் ஏற்கனவே சேகருடன் ஆடு மேய்த்துக்கொண்டிருந்ததாலும் அவருடைய ஆட்டுப்பட்டியிலிருந்து ஆட்டை மேய்ப்பதற்காக ஓட்டுவதற்கு பட்டியை திறந்தேன். அப்போது எதிரி விஜயா கோலும், ராஜா கத்தியையும் எடுத்து வந்து என்னை நோக்கி உன்னை யார் ஆட்டை ஓட்டச்சொன்னது என்றும், உனக்கும் இதுக்கும் சம்மந்தமில்லை என்றும், உன்னை வெட்டி விடுவேன் என்றும், மிரட்டினார்கள். அதனால் நான் அங்கிருந்து சென்றுவிட்டேன். அதற்கு பின்பு எதிரிகள் ஆடுகளை வண்டியில் ஏற்றிவிட்டார்கள். அது எந்த பக்கம் போனது என்று எனக்கு தெரியவில்லை. இவ்வழக்கு சம்மந்தமாக அவ்வளவுதான் எனக்கு தெரியும்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை= தற்போது இல்லை